# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● நவம்பர் 11, 2017 Weekly E-paper ● November 11, 2017


# என்ன நடக்கிறது இங்கே?



● சுப.வீரபாண்டியன்

ஆளும் கட்சி எதிர்க்கட்சிகளை மிரட்டுவதும், வருமானவரிச் சோதனைகள் அதில் ஒரு பகுதியாக இருப்பதும் இந்தியாவில் புதிதன்று. ஆனாலும், ஒளிவு மறைவின்றியும், கொஞ்சம் கூடக் கூச்சமே இன்றியும் இப்படி நடந்ததாக இதுவரையில் இல்லை.

சசிகலா, தினகரன் குழுவினர் ஏராளமாகச் சொத்து சேர்த்து வைத்துள்ளனர் என்பது இங்கு அனைவரும் அறிந்த உண்மை. அதன் பயனாகவே, இன்று சசிகலா, இளவரசி உள்ளிட்டோர் சிறையில் உள்ளனர். தினகரன் மீதும் பல வழக்குகள் உள்ளன. ஆனால் இவற்றிற்கெல்லாம் மூல காரணம் யார்? யாருடைய நிழலில் இருந்துகொண்டு இவர்கள் இந்தத் தவறுகளைச் செய்தார்கள் என்பது மத்திய அரசு உட்பட எவருக்குமே தெரியாதா?

அனைத்து ஊழல்களுக்கும் காரணமாக இருந்த ஜெயலலிதாவை, மோடியும், பாஜகவும் கொண்டாடினர். 2015 ஆகஸ்ட் முதல் வாரம், சென்னையில் அரசு விழா ஒன்றில் கலந்து கொள்ள வந்த பிரதமர் மோடி, நேராக ஜெயலில்தா இல்லம் சென்று மதிய விருந்துண்டாரே, அப்போதெல்லாம் ஜெயலலிதாவின் மீது எந்த ஒரு சந்தேக நிழலும் படியவே இல்லையா?

***தேவையென்றால் அல்லது வேண்டியவரென்றால் வீட்டுக்குப் பிரதமர் வருவார். வேண்டாதவர் என்றால், வீட்டுக்கு வருமானவரித் துறை வருமா?***

இன்றைய முதல்வர் எடப்பாடி, துணை முதல்வர் ஓபிஎஸ் மீதெல்லாம் வருமானவரித் துறைக்கு எந்த சந்தேகமுமே இல்லையா? அவர்களிடம் உள்ள ஒவ்வொரு காசும் உழைத்து உழைத்துச் சேர்த்த காசா? ஓபிஎஸ் முதல்வராக இருந்தபோது, அன்றைய தலைமைச் செயலாளர் அலுவலகத்திலும். வீட்டிலும் நடந்த வருமானவரிச் சோதனைகள் என்னாயின? அவரிடமும், சேகர் ரெட்டியிடமும் கட்டுக் கட்டாக புதிய 2000 ரூபாய்த் தாள்கள் கைப்பற்றப்பட்டனவே, அவை அவர்களுக்கு எப்படி வந்தன? எங்கிருந்து வந்தன? ஏதேனும் விசாரணை உண்டா? கரூர் அன்புநாதன் என்ன ஆனார்? அமைச்சர் விஜயபாஸ்கர் வீட்டில் நடந்த சோதனையின் முடிவு பற்றி ஏன் எந்த அறிவிப்பும் இல்லை? ஒருவேளை, இவர்களில் யாராவது தினகரனுக்கு ஆதரவு தெரிவித்தால் அந்த அறிவிப்புகளும், அவற்றின் மீதான நடவடிக்கைகளும் வெளிவருமோ என்னவோ!


இவை எல்லாம் ஒருபுறமிருக்க, தினகரன் வீட்டில் நடந்த சோதனை, வேடிக்கையான ஒரு பக்க விளைவை ஏற்படுத்தியுள்ளது. நேற்று உரையாடிக் கொண்டிருக்கும்போது ஒருவர், "இவ்வளவு நெருக்கடிக்குப் பிறகும், ஊடகங்களிடம் சிரித்துக்கொண்டும், துணிவாகவும் தினகரன் பேட்டி கொடுத்தது எனக்கு மிகவும் பிடித்தது" என்றார்.

பாஜக அரசு மிகவும் பாடுபட்டு, தினகரனை ஒரு 'ஹீரோவாக' ஆக்கிக் கொண்டிருக்கிறது!

டி.டி.வி.தினகரன் மிகவும் நேர்மையானவர் என்பதோ, முற்போக்காளர் என்பதோ நம் கருத்து இல்லை. சோதனை நடந்த வேளையில் கூட அவர் வீட்டில் கோமாதா பூஜைதான் நடந்துகொண்டு இருந்தது. எனவே அவரை நாம் ஆதரிக்க வேண்டிய தேவையில்லை ஆனால் முழுக்க முழுக்க அரசியல் காரணங்களுக்காக நடைபெறுவதாக நம்பப்படும் ஒரு நடவடிக்கையை எதிர்ப்பதே ஜனநாயகம் ஆகும். அந்த வகையில் தினகரன் தொடர்பான நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட அதிகாரிகள் நடத்திய சோதனையைக் கண்டிப்பாக எதிர்த்தே தீரவேண்டும். ●

## அன்றும்... இன்றும்...










சுபவீயின் நூல்கள்

கருஞ்சட்டை அலுவலகத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்

விற்பனை நேரம் : காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

நிர்வாக ஆசிரியர்கள்
சிற்பி செல்வராஜ்
கி.செந்தில்

வெளியிடுபவர்
கோ.தினகரன்

இணையதளம்
www.keertru.com

சுபவீ வலைப்பூ
www.subavee.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
122/130 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-4204 7162

## கம்பரின் மறுபக்கம்



புலவர் ஆ.பழனி எழுதியுள்ள ‘கம்பரின் மறுபக்கம்’ நூல் அறிமுக விழா 4.11.2017 அன்று, காரைக்குடியில் நடைபெற்றது. நூலை அறிமுகம் செய்து தோழர் சுபவீ பேசினார். விழாவில் மு.தென்னவன், திராவிட மணி, நடராசன், பிராட்லா, வைகறை, அரங்கசாமி ஆகியோர் பங்கேற்றனர்.

## நூறு பூக்கள் மலரட்டும்





**7.11.2017**இல், காரைக்குடி, சமதர்ம இல்லத்தில் நூறு பூக்கள் மலரட்டும் என்னும் தலைப்பின் கீழ் ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. தோழர்கள் சுபவீ, ச.சிதம்பரம், சண்முகநாதன், குமரன் தாஸ், நவில் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## இரட்டைக்குழல் துப்பாக்கிகள்தாம்!



**தே**னியில் அரசு சார்பில் நடைபெற்ற எம்ஜிஆர் நூற்றாண்டு விழாவில் பேசிய தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, நானும் ஓபிஎஸ்ஸும் இரட்டைக்குழல் துப்பாக்கிகளாகச் செயல்படுவோம் என்று கூறியுள்ளார்.

இரட்டைக்குழல் துப்பாக்கி என்னும் தொடர் தமிழக அரசியலில் புகழ் பெற்ற தொடர். திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டும் இணைந்து செயல்படும் என்பதை அறிவித்த தொடர். அதனை இன்று சற்றும் பொருத்தமில்லாமல் எடப்பாடி பயன்படுத்தியுள்ளார்.

இந்த இரண்டு துப்பாக்கிகளும் ஒன்றையொன்று சுட்டுக்கொள்ளத் தருணம் பார்த்திருப்பவை. ஏற்கனவே சுட்டுக்கொல்ல முயன்றவையும் கூட. சட்டமன்றத்தில் எடப்பாடி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தபோது, ஓபிஎஸ் தலைமையிலானவர்கள் அதனை ஆதரித்தும், எடப்பாடியை எதிர்த்தும் வாக்களித்தவர்கள்.

எடப்பாடி ஆட்சி ஊழல் நிறைந்தது என்று அறிவித்தவர்கள் ஓபிஎஸ் அணியினர். பிறகு அதனைப் பேசிச் சரி செய்துவிட்டோம் என்றார் மூத்த முன்னாள் அமைச்சர் பொன்னையன். (உலகிலேயே ஊழலைப் பேசிச் சரி செய்தவர்கள் இவர்களாகத்தான் இருக்க முடியும்).

இப்போதும் முன்னாள் தமிழக ஆளுனர் கைககளைப் பிடித்துச் சேர்த்து வைக்க, சேர்ந்திருப்பதுபோல் ஒருகாட்சி தருகின்றனர். பணம், பதவி இரண்டையும் காப்பாற்றிக் கொள்ள இந்த இணைப்பு அவர்களுக்குத் தேவைப்பட்டுள்ளது என்பதைச் சின்னக் குழந்தை கூட அறியும்.

இவர்களா இரட்டைக்குழல் துப்பாக்கிகள்? ஒருவேளை, உண்மை, நேர்மை, நியாயம் அனைத்தையும் சுட்டுக்கொல்லும் துப்பாக்கிகளாக இருக்கலாம்!

## திராவிட இயக்கச் சாதனைகள்



**6.11.2017**இல் திருச்சியில் ரோட்டரி சங்கங்களின் கூட்டத்தில் ஒரு நூற்றாண்டுக்கால திராவிட இயக்கத்தின் சாதனைகள் என்னும் தலைப்பில் தோழர் சுபவீ உரையாற்றினார்.



# தெருவுக்கு வந்து ஓராண்டு ஆகிவிட்டது!

சென்ற ஆண்டு நவம்பர் 8 ஆம் தேதி பண மதிப்பிழப்பு அறிவிக்கப்பட்டது. இப்போது ஓராண்டு நிறைவடைந்துவிட்டது. இன்றுவரையில் எந்தப் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படவில்லை. மாறாக, ஒரு பின்னடைவே ஏற்பட்டுள்ளது. இந்நிலையைக் கண்டித்து, கடந்த 8 ஆம் தேதி இந்தியா முழுவதும் எதிர்க்கட்சிகள், அதனைக் கறுப்புநாள் என்று அறிவித்து, ஆர்ப்பாட்டம் நடத்தின. பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட, மதுரையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்குத் திமுக செயல்தலைவர், தளபதி ஸ்டாலின் தலைமை தாங்கினார். மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட சில இடங்களைத் தவிர, தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்டத் தலைநகரம் சிவகங்கையில், மாவட்டச் செயலாளர் பெரியகருப்பன் தலைமையிலும், காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் கே.ஆர்.ராமசாமி முன்னிலையிலும் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், திமுக இலக்கிய அணித் தலைவர் தென்னவன், திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

திமுக வின் மாவட்டத் துணைச் செயலர் சேங்கை மாறன் கண்டன முழக்கங்களை முழங்கினார்.

● சுப.வீரபாண்டியன்

## கண்டன ஆர்ப்பாட்டத்தில் தோழர் சுப.வீரபாண்டியன் ஆற்றிய உரையின் ஒரு பகுதி:



பண மதிப்பிழப்பை எதிர்த்து இன்று நாம் தெருவுக்கு வந்துள்ளோம். ஆனால் ஏழை, எளிய மக்கள் தெருவுக்கு வந்து ஓர் ஆண்டு ஆகிவிட்டது. மக்கள் மட்டுமின்றி, நாட்டின் பொருளாதாரமும் தெருவுக்கு வந்துவிட்டது.

1946 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் ஆட்சி நடந்தபோது பண மதிப்பிழப்பு அறிவிக்கப்பட்டது. அப்போது 10 பவுண்ட் தாள் செல்லாது என்றனர். அடுத்து, 1978இல் மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்தபோது, 1000, 5000, 10000 ரூபாய்த் தாள்கள் செல்லாது என்று அறிவித்தனர். இப்போது நரேந்திர மோடி ஆட்சியில் மூன்றாவது முறை அறிவிப்பு வந்துள்ளது.

முதல் இரு அறிவிப்புகளுக்கும் இப்போது வந்துள்ள அறிவிப்புக்கும் இடையே ஒரு பெரும் வேறுபாடு உள்ளது. 10 பவுண்டு தாளும், 78 இல், ஆயிரம், ஐயாயிரம், பத்தாயிரம் ரூபாய்த் தாள்களும் பெரும் செல்வந்தர்களிடம் மட்டுமே இருந்தன. சாதாரண மக்கள் அவற்றைப் பார்த்தது கூட இல்லை. அதனால் ஏழை மக்கள் மட்டுமில்லை, நடுத்தட்டு மக்கள் கூட அன்று பாதிக்கப்படவில்லை. ஆனால் இன்றோ, பணக்காரர்கள் யாரும் பாதிப்புக்கு உள்ளாகவில்லை. நடுத்தட்டு, அடித்தட்டு மக்களே பெரும் பாதிப்புக்கு உள்ளாகினர். முதலைகளை அழிப்பதற்காகக் குளத்தைச் சுத்தம் செய்கிறோம் என்றனர். ஆனால் இறுதியில், முதலைகள் எல்லாம் தப்பி விட்டன. மீன்கள் எல்லாம் இறந்துபோய் விட்டன.

சென்றாண்டு பண மதிப்பிழப்பை அறிவிக்கும்போது அதற்கான காரணங்களாக மூன்று செய்திகளைப் பிரதமர் கூறினார். 1. கறுப்புப்பண ஒழிப்பு 2. கள்ளப்பண ஒழிப்பு 3. தீவிரவாதிகளின் செல்வ வழி அடைப்பு. இந்த மூன்றில் எந்த ஒன்றேனும் இன்றுவரையில் நிறைவேறியுள்ளதா?

1000, 500 ரூபாய்த் தாள்கள் முடக்கப்பட்டபோது, மொத்தப் பணப் புழக்கத்தில் 86% முடக்கப்பட்டது. அப்படி முடங்கிய பணத்தின் அளவு 15.44 இலட்சம் கோடி என்று அரசு அறிவித்தது. இதில் குறைந்தது 3 இலட்சம் கோடி ரூபாயாவது வங்கிக்கு வராமல் தங்கிவிடும். அவை அனைத்தும் கறுப்புப்பணம் என்பது அரசின் கணக்கு.

ஆனால் என்ன நடந்தது? ரிசர்வ் வங்கியின் அறிவிப்பின்படி, 15.28 இலட்சம் கோடிரூபாய் வங்கிகளுக்கே திரும்பி வந்து விட்டது. அதாவது 99% பணம் மீண்டும் வந்துவிட்டது. அப்படியானால் எங்கே போனது கறுப்புப் பணம்? கறுப்புப்பணம் எங்கும் போகவில்லை. அவை அனைத்தும் வெள்ளைப் பணமாகி விட்டன. அவ்வளவுதான்! ரோஸ் வண்ணத்தில் 2000 ரூபாய்த் தாள் வந்தது. பச்சை வண்ணத்தில் 500 ரூபாய் வந்தது. காவி நிறத்தில் 200 ரூபாய் வந்தது. ரோஸ் பணம், பச்சைப் பணம், காவிப் பணம் எல்லாம் வெளிவந்து விட்டன. கறுப்புப்பணம் மட்டும் வெளிவரவே இல்லை.

கள்ளப் பணமாவது ஒழிந்ததா? புதிய 2000 ரூபாய்த் தாள் வெளிவந்த சில வாரங்களிலேயே அதே மாதிரி கள்ள நோட்டு வந்துவிட்டது. இப்போது அவை மேலும் எவ்வளவு பெருகியுள்ளன என்று தெரியவில்லை.

தீவிரவாதம் முடிந்துவிட்டதா? கடந்த ஓராண்டில்தான் காஷ்மீரில் கூடுதலாகப் போராட்டங்கள் நடந்துள்ளன. ஆக எல்லாவிதத்திலும் பண மதிப்பிழப்பு நடவடிக்கை தோல்வியடைந்துள்ளது. இந்த உண்மை அரசுக்கும் தெரியும். ஆனால் அதனை மூடி மறைக்கின்றனர்.

பண மதிப்பிழப்பு நடவடிக்கைக்குப் பின்னர், நாட்டில் நில விற்பனைத் தொழில் (ரியல் எஸ்டேட்), கட்டிடத் தொழில் எல்லாம் பெரும் சரிவைக் கண்டுள்ளன. நடைபாதை வணிகர்கள், அன்றாடங் காய்ச்சிகள், சிறுதொழில் செய்தோர் அனைவரும் தள்ளாடித் தத்தளிக்கின்றனர். பாபா ராம்தேவின் பதஞ்சலி வணிகம் மட்டுமே கொடிகட்டிப் பறக்கிறது.




# பெய்யெனப் பெய்யும் மழை

● சிவதி

பால்ய பருவத்தில் ஒருமுறை இரவு மொட்டை மாடியில் அப்பாவுடன் படுத்திருந்தேன். அப்பா வானத்து மேகங்களின் அமைப்பை பார்த்துவிட்டு, நிலவைச் சுற்றி வெற்று விரலால் ஒரு வட்டம் வரைந்தார். அவர் வரைந்த திசையினை உற்றுக் கவனித்த போது நிலவைச்சுற்றி மேகங்கள் வட்டமாகக் கூடு கட்டியது போன்ற அமைப்பை நானும் என் தங்கையும் பார்த்தோம். அப்பா சொன்னார் ”நாளை அல்லது நாளைய மறுதினம் மழைபெய்யும், நீ, வேணுமின்னா பாரேன்” என்றார். அப்போது மழைக்காலம் கூட இல்லை. ஆனால் அப்பா சொன்னது போலவே மழை வெளுத்து வாங்கியது. எங்களுக்கெல்லாம் பெருத்த வியப்பு. விவசாயியின் மகனான அப்பாவுக்கு வானியல் பற்றிய தெளிவும் அனுபவம் கற்றுத்தந்த அறிவும் மிகச்சரியாகக் கணிக்க கற்றுக் கொடுத்திருந்தது என்பதைப் பிறகு அறிந்து கொண்டேன்.

மின்னிக்கொண்டிருக்கிற வானத்தைப் பார்த்து அப்பா ”மின்னுவனவெல்லாம் பின்னுக்கு” போகிற போக்கில் சொல்வார். அவர் சொல்லுக்கென்றே பெருமழை ஒன்று வானத்தில் அடைகாத்துக் காத்துக் கொண்டிருக்கும். ஆச்சரியம்தான், இப்படித்தான் வானத்தில் ஏற்படும் மாற்றங்களை கண்டுகொண்டு அடுத்த மாற்றங்களை நம் முன்னோர்கள் வெகு லகுவாக சொன்னார்கள். ஆனால் காலநிலை மாற மாற நம் கணிப்புகளைப் பொய்ப்பித்து பல பருவநிலை மாற்றங்களை உலகம் அடைந்து கொண்டு வருகிறது. பருவம் தவறிய மழை, தாங்க முடியாத குளிர், நடுப்பகல் பனிமூட்டம் என பல மாற்றங்களை எதிர்கொள்கிறோம். துருவங்கள் உருகுகின்றன, பருவங்கள் மாறுகின்றன. வானம் ஒவ்வொருநாளும் ஒரு வேடிக்கை நிகழ்த்துகிறது.

அதெல்லாம் கிடக்கட்டும், ’நாளை மழை வருமா? வராதா? அதுமட்டும் சொல்லுங்கள் போதும்’ என்று மாடிக்குச் சென்று துணியைக் காயப் போடுபவர் முதல் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பவர் வரை கேட்கும் முதன்மைக் கேள்வி. மனிதன் எழுப்பும் எல்லா புதிர்களுக்கும் அறிவியல் தன்னகத்தே விடைகளை வைத்திருக்கின்றவே. நம் கைகளில் வைத்திருக்கும் ஆன்ட்ராய்ட் செயலி இதனைச் சாத்தியப் படுத்துகிறது.

ப்ளே ஸ்டோர் சென்று AccuWeather with Superior Accuracy என்று தட்டச்சு செய்யுங்கள். செஞ்சூரியன் போன்ற சின்னத்துடன் உங்களுக்கு ஒரு செயலி தோன்றும். இதனைத் தரவிறக்கம் செய்து கொள்ளுங்கள். உங்கள் மொபைலில் GPSஐ இயக்குங்கள். நீங்கள் இருக்கும் இடத்தை அதுவாகவே தேர்வு செய்து கொள்ளும். நொடிப்பொழுதில் உங்களுக்கு இது வானிலையினை அறிவிக்கும்.

ஆமாம், வானிலை குறித்து அறிய பல்வேறு தளங்கள் இருந்தாலும் துல்லியமான பல்வேறு வானிலைத் தகவல் சேவை மூலம் நம்மை வெகுவாகக் கவருகிறது. இதனை திரையில் தீம் ஆக நிறுவிக்கொண்டால் சூரியன் தகிக்கும் போது வெயில் போலவும் மழையடித்தால் சாரல் பொழிவது போலவும் வானம் இறங்கி வண்ணத்திரைக்குள் வந்து விடும். ஒவ்வொரு மணித்துளியும் இது தானாகவே வானிலைக்கு ஏற்றதுபோல் மாறிவிடுகிறது. மழை வருமா வராதா என்ற கேள்வி மட்டுமல்ல இப்போது என்ன வெப்பநிலை நிலவுகிறது என்றும் உங்களுக்கு முன்கூட்டியே எச்சரித்துவிடும்.

இந்த செயலியில் பிடித்த அம்சம் என்னவென்றால் காற்று எந்தத் திசையில் இருந்து அடிக்கிறது. அது எவ்வளவு வேகத்தில் அடிக்கிறது என்பதை தமது சாதனங்கள் மூலம் பெறும் தகவலில் இருந்து சரியாகச் சொல்லிவிடுகிறது. நாள்தோறும் நமது வாட்ஸ் ஆப் குழுவில் வானிலை தொடர்பாக வரும் அறிக்கைகள் ஏதும் நம்பும்படி இல்லை. இது நம்பகமான தகவல் இல்லை, வதந்தியா என ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. மெய்ப்பொருள் காண்பது அறிவு என்றவாறு இந்தச் செயலியைச் சொடுக்கினால் போதும் வானிலை குறித்த செய்தியை, பத்தியாக, காணொளியாக, படமாகத் தந்துவிடுகிறது. ஒவ்வொரு பதினைந்து நிமிடத்திற்கும் இது Update செய்யப்படுகிறது.

இந்த வானிலை அறிக்கை உங்கள் பகுதி மட்டுமல்ல, நீங்கள் பயணம் செய்யுமிடம் உலகின் எந்தப் பகுதியானாலும் அந்த இடத்தின் பெயரினை உள்ளீடு செய்தால் இன்னும் பதினைந்து நாள்களுக்கான வானிலை நிகழ்வுகளை இது உங்களுக்குச் சொல்லிவிடும். Visibility என்ற பகுதியில் எவ்வளவு தூரம் உங்களுக்குப் பார்வை புலப்படும் என்பதை மீட்டர் அளவில் தெரிவித்துவிடும். கூடவே காற்றில் உள்ள ஈரப்பதம், சூழியலில் உள்ள மாசு ஆகியன குறித்தும் எடுத்துச் சொல்லுகிறது. இந்தச் செயலியின் வடிவமைக்கப்பட்ட விதத்தில் இருந்தே பல செய்திகளை நாம் அறிய முடிகிறது. பல பயனர்களின் பாராட்டுகளை இந்தச் செயலி பெற்றதால் ப்ளே ஸ்டோரின் ஆசிரியர் குழு இந்தச் செயலியைப் பரிந்துரைக்கின்றனர். எனவேதான் அதிகப் பயனர்கள் இந்தச் செயலியை தரவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகின்றனர்.

ஒரு நாள் பொழுதில் சூரியன் எத்தனை மணிக்கு உதிக்கும் எத்தனை மணிக்கு மறையும் என்பதெல்லாம் இந்த செயலி புட்டு புட்டு வைத்துவிடும். இந்த செயலியினால், புவிப்பந்தில் எந்தெந்த நாடுகளில் என்ன மாதிரியான பருவநிலை மாற்றங்கள் உள்ளன. தற்சமயம் என்ன விதமான நிலைமை உள்ளது என்பதை, செய்தி, காணொளிப்படங்களாக நாம் அறியலாம். புவிப்பந்தின் செயற்கைக்கோள் வரைபடம் மூலம் மழை மேகங்கள் நகரும் திசையினை நாம் தெரிந்து கொள்ளலாம். Real Feel மற்றும் Accu Weather நிறுவனங்கள் தமக்கென தனித்துவத்தின் வழியே நல்லதொரு சேவையை வழங்கிப் பல நாடுகளில் பட்டையைக் கிளப்பிக் கொண்டு வருகின்றன.

வடக்கிலிருந்து தெற்கே வரும் பிரதமர் நமக்கு என்ன செய்யப்போகிறார் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி வரும் காற்று நமக்கு மழைதருமா? புயல் தருமா என்பதை இந்தச் செயலி நமக்கு ஒளிவு மறைவற்றுத் தருகிறது. ஒருவேளை மழை வேண்டுமானால் பொய்த்துப் போகும், ஒரு போதும் சூரியனும் அது தரும் ஆற்றலும் பொய்ப்பதில்லை என்பதைக் காலமும் காலநிலையும் நமக்கு உணர்த்தும் பேருண்மை.

இந்தச் செயலியினைத் தரவிறக்கம் செய்ய இங்கே சொடுக்கவும் https://play.google.com/store/apps/details?id=com.accuweather.android&hl=en

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.